# திருமலையில் கிளேமோர் தாக்குதல்: படையினருக்கு பலத்த சேதம்


விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 38 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 18 இதழ்: 204
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 3-9-1991


[திருமலை]

திருமலையில் விடுதலைப்புலிகள் நடத்திய கிளேமோர் தாக்குதலில் சிக்கிய சிறிலங்கா இராணுவத்திற்கு பலத்தசேதமேற்பட்டிருப்பதாக தெரிய வருகிறது:

நேற்றுக்காலை எட்டுமணியளவில் சம்பூர் கோட்டையிலிருந்து 7-ம் கட்டை நோக்கிச் சென்ற ராணுவத்தினர்மீதே

(4ம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீ. ல. சு: க. ஆர்ப்பாட்ட பேரணி நடாத்த திட்டம்

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாஸா பதவி விலக வேண்டுமெனக் கோரி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மாபெரும்ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை நடாத்த திட்டமிட்டுள்ளதாக திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## எம்.பிக்களுக்கு தகுந்த பாதுகாப்பு

(கொழும்பு)

ஜனாதிபதிக்கு எதிராக கையெழுத்திட்ட ஐ. தே. கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு வழங்கப்படுமென பொலிஸ் மா அதிபர் தம்மிடம் உறுதியளித்துள்ளதாக திரு. லலித் அத்துலத் முதலி தெரிவித்துள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

★ நாடாளுமன்ற குழு கூட்டத்தில்

# 116 எம். பிக்கள் ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்து வாக்குறுதி!

## குற்றச்சாட்டு மனுவை ரத்தாக்க முயற்சி

[கொழும்பு]

**ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவுக்கு எதிரான மனுவை முறியடிப்பதற்காக அரச தரப்பைச் சேர்ந்த 116 எம். பிக்கள் திரு. பிரேமதாஸாவுக்கு நேற்று தமது ஆதரவைத் தெரிவித்தனர். நேற்று நடைபெற்ற அரசாங்க நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் அரசதரப்பு எம். பிக்கள் தமது ஆதரவை ஜனாதிபதிக்கு வழங்குவதாகத் தெரிவித்தனர்.**

ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவிக்கும் மனு ஒன்று நேற்றைய நாடாளுமன்றக் கூட்டத்தில் முன்மொழியப்பட்டது. சபை முதல்வரும் கைத்தொழில் அமைச்சருமான திரு. ரணில் விக்கிரமசிங்கா இதை முன்மொழிய போக்குவரத்து அமைச்சர் திரு விஜயபால மெண்டிஸ் வழிமொழிந்தார்.

இதேவேளை 116 எம்: பிக்கள் ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்திருப்பதால ஜனாதிபதிக்கு எதிராக சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு மனு செல்லுபடியற்றது என சபாநாயகரிடம் தெரிவிக்கவேண்டுமெனவும் நேற்றைய நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது

இதன் அடிப்படையில் நேற்று ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கிய 116 எம். பி.க்களும் இன்று மாலை சபாநாயகரைச்

(4-ம் பக்கம் பார்க்க)

## எதிரான எம். பிக்களும் கூட்டத்தில் பங்குபற்றினர்?

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசாவுக்கெதிரான நாடாளுமன்ற உறுப்பினர்களும் நேற்றுக் கூடிய நாடாளுமன்றக் குழுக்

(4ம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் வெடிகுண்டு: ஆறு பேர் காயம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் தானியக்குவியலொன்றில் மறைத்துவைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்து ஆறு பேர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதல் தொடர்பான மேலதிக விபரங்கள் தெரிவிக்கப்படவில்லை.

## வவுனியாவில் தாக்குதல்

(வவுனியா)

வவுனியா பகுதியிலுள்ள இராணுவ முகாம் ஒன்றின் மீது நேற்றுமுன்தினம் விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலில் படையினருக்கு ஏற்பட்ட சேத விபரங்கள் பற்றி எதுவும் தெரியவில்லை.

## பிரேமாவிற்கு எதிராக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 76 பேர் கையொப்பம்

(கொழும்பு)

ஜனாதிபதி ஆர் பிரேமதாசாவுக்கு எதிரான மனுவில் 76 எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கையெழுத்திட்டுள்ளதாகத் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள்-100,

(4ம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றில் இரகசிய வாக்கெடுப்பு நடத்துவது நல்லது - லலித்

[கொழும்பு]

ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிரான குற்றச்சாட்டு பிரேரணைக்கு நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களுக்கிடையே இரகசிய வாக்கெடுப்பொன்றை நடத்துவதே சிறந்த வழியாகும் என திரு. லலித் அத்துலத்முதலி

[4-ம் பக்கம் பார்க்க]

## புலனாய்வுக் குழு மீண்டும் இலங்கை வருகிறது

[புதுடில்லி]

ராஜீவ் கொலை தொடர்பாக புலனாய்வு - நடாத்தி வரும் விஷேட புலனாய்வு பிரிவினர் மீண்டும் இலங்கை வர

[4-ம் பக்கம் பார்க்க]

## கணேசலிங்கம் கருத்து

[கொழும்பு]

இந்தியா, ரஷ்யா போன்ற பெரிய நாடுகளிலேயே அரசியல் நிலையில் பெரும் மாற்றங்கள் ஏற்படும்போது இலங்கையில் இவ்வாறானதொரு சம்பவம் ஏற்படுவது பெரியதொரு விடயமல்ல.

இவ்வாறு கொழும்பு துணை மேஜர் திரு. கணேசலிங்கம் தெரிவித்துள்ளார். (சி)

## ஜனாதிபதிக்கு எதிரான மனு வாக்கெடுப்பில் தோல்வியுறும்

(கொழும்பு)

ஜனாதிபதிக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்ட மனு வாக்கெடுப்பிற்கு வரும்போது அது தோல்வியடையுமென்றும் தமது பக்கம் 20 பெரும்பான்மை வாக்குகள் கிடைக்குமென்றும் திரு. பிரேமதாஸா தரப்பு பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

நாடாளுமன்ற சபாநாயகர் உட்பட 116 உறுப்பினர்கள் தங்கள் பக்கமிருப்பதாகவும் வாக்கெடுப்பின் போது தமக்கு 20 அதிகப்படியான வாக்கு

[4-ம் பக்கம் பார்க்க]



யாழ்ப்பாணத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தலைவர் பிரபாகரன். (படம்: தேவா)

## வரி விளம்பரம்

### வானொலி நாடகம்

இன்று விற்பனையாகின்ற இரண்டே இரண்டு வானொலி நாடக நூல்கள் அராலியூர் ந சுந்தரம்பிள்ளை எழுதிய கெட்டிக்காரர்கள் 25/- முதலாம் பிள்ளை 30/- மாணவர்களும் படிப்பதற்கும் நடிப்பதற்கும் ஏற்றவை. (சி 5142)

### வாங்க / விற்கப்படும்


பழையபுத்தகங்கள், கொப்பிகள், சஞ்சிகை, போத்தல் வகைகள், உர, கோழித்தீன், சிமெந்து உறைகள், வெற்றுத் தகரங்கள் வாங்கப்படும். விற்கப்படும். சோ சேனாதிராசா, முகாமையாளர், இராமநாதன் பழைய புத்தகசாலை, 108, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (சி-5168)

### காணவில்லை

மகேந்திரன் எனப்படும் சுமார் 13 வயது மதிக்கத்தக்க மெலிந்த தோற்றமுடைய பையனை 30-08-91 இரவுமுதல் காணவில்லை. வெற்றிலை போடும் பழக்கம் உடையவர். கடைசியாக காணப்பட்ட போது நீலநிற அரைக் காற் சட்டையுடன் காணப்பட்டார். அவரைப்பற்றிய தகவல்களை மு. சுந்தரலிங்கம் 'சதாபொன்ஸ்' மாலுசந்தி, அல்வாய் என்ற முகவரிக்கு தெரியப்படுத்தவும். (எ-1550)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## 45-ம் நாள் நினைவஞ்சலி



கட்டைக்காட்டில் சிறிலங்கா இராணுவத்தினருடன் நேரடி மோதலில் வீரமரணமடைந்த

### வீரவேங்கை வரன்

(சரவணமுத்து ரவிச்சந்திரன்)

தாயின் மடியில்: 12-03-1973

தாயக மண்ணில்: 21-7-1991

ஆனையிறவு கட்டைக்காட்டில்
வேங்கை நீ மடிந்ததில்லை - உன்
வீரமும் குறைந்ததில்லை
ஓங்கிய போர் முனையில் நீ
ஒதுங்கியும் நின்றதில்லை
பாங்குடன் போர்புரிந்து - நீ
பகைவரை வீழ்த்தும் வேளை
தாங்கினாய் நெஞ்சில் குண்டை
தமிழ் அன்னை சிலிர்த்தே போனாள்

குடும்பத்தினர்.

42, மானிப்பாய் வீதி,
(கோணாந் தோட்டம்)
யாழ்ப்பாணம். (சி-5242)

## 'விபுலாநந்தர்' மண்டபம்

(மட்டக்களப்பு)

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பிரதான மண்டபத்திற்கு 'விபுலாநந்தர் மண்டபம்' என்று பெயர் சூட்டுமாறு கிழக்குப் பல்கலைக் கழக ஊழியர் சங்கம், மேற்படி பல்கலைக் கழக நிர்வாகத்தைக் கோரியுள்ளது. [153]

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் E. K. குமரையா

(முன்னாள் J.F.L. காரியதரிசி, J.F.R.A. தலைவர்)

தோற்றம்: 24-07-1928 — மறைவு: 03-09-1990

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக இன்று [3-9-91] செவ்வாய்க்கிழமை நண்பகல் 11 மணிக்கு பாண்டியந்தாழ்வு புனித சந்தனமாதா ஆலயத்தில் நடைபெறவுள்ள திருப்பலிப் பூசையில், யாழ். உதைபந்தாட்ட லீக், யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தலைவர்கள் (J.F.L., J.F.R.A.)

செயலாளர்கள் (J.F.L., J.F.R.A.)

(சி-5250)

## 4ம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் சின்னத்தம்பி குமாரசாமி

மலர்வு: 05-06-1933

உதிர்வு 09-08-1987

அன்போடு அரவணைத்து வளர்த்து வந்த தந்தையே
ஆண்டவனும் மனம் இரங்கி பொறுக்கலையே.
எவ்வுலகில் உன்னைக் காண்பேன் அப்பா
இவ்வுலகில் நீநின்று வழிகாட்டி வைத்தாயே
இனி யாரப்பா எமக்கு ஆறுதல் கூறுவார்கள்
உனையிழந்து மூன்று ஆண்டு முடிவில்
அன்னையை இழந்தோம்.
ஆறாத்துயரால் வாடிவதங்கினோம் தந்தையே
கண்ணீரால் உங்கள் இருவர்களுக்கும்
மாலை சூடுகிறோம்.


அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்;

பிள்ளைகள், மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்

இணுவில் தெற்கு,
இணுவில். [சி-5248]

## நீங்காத நினைவுடன்

### 45-வது நாள் வீரஅஞ்சலி

★  ★

### வீரவேங்கை மேஜர் கோணேஸ்

தாய்க்கொரே மகனாய் 16-05-1970

தமிழ் ஈழத்தின் மாவீரனாய் 21-07-1991

சாவையே சரித்திரமாக்கும் சாதி தமிழ்ச்சாதி — இந்த
சத்தியத்தை இவன் சாவும் சரியாகியது
நேற்றல்ல இன்றல்ல ஆனையிறவில் அன்னியன் ஆதிக்கம்
நாளையும் வேண்டாமென பாய்ந்தனர் புலிகள் அப்போ
படை நடுங்கியது! வெற்றிலைக்கேணியில் குவிந்தனர் எதிரி
வெட்டை வெளிகளில் யுத்தம் நடந்தது — வீரமுடன்
புலிகள் நெஞ்சு நிமிர்ந்தது
இந்தக் குண்டுகள் என் செய்யும் — தூ!
அற்ப என் உயிர் குடிக்குமென மோதினர் வேங்கையர்
இவனும் கட்டைக்காட்டினில் எதிரியை சிதறவைத்தான்
மார்பினில் குண்டேந்தி மாவீரனானான்
மிஞ்சிய இவனின் பணியினை முடித்திட நாமும்
புகுவோம் களம்தனில்
விரைந்து வாரீர்

(சி-5245)

நண்பர்கள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

★ ★  ★ ★

### திருமதி குமாரசாமி மீனாட்சி

மலர்வு: 05-05-1939

உதிர்வு 13-09-1990

திதி: 03-09-1991

பாசமுடன் பெற்று வளர்த்த தெய்வமே
உன்பிரிவால் தடுமாறித் தவிக்கின்றோம்
அம்மா
அணையாத குலவிளக்காய் இருந்தாயே வீட்டில்
அன்போடு அணைத்து வளர்த்தாய் - தாயே
நீ பெற்ற செல்வம் ஆறும் தவித்து
நிற்கிறோமே யார் துணை தாயே
எங்கள் கண்ணில் ஓடும் கண்ணீர்
இவ்வுலகில் வற்றாது தாயே
ஏனம்மா எங்களைத்தனியாகத் தவிக்க வைத்தாய்
தாங்காத கொடுநோய் வந்ததேனோ
தாங்க மாட்டம் உன்பிரிவால் வாடுகின்றோம்
— அம்மா

ஓர் ஆண்டு திவசம் ஆகியும்
ஒரு நிமிசம் கூட மறக்கவில்லைத்தாயே

அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிராத்திக்கும்

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

இணுவில் தெற்கு, இணுவில் (சி-5247)

# சாவகச்சேரி - சங்கத்தானை இத்தியடி
## வீரகத்தி விநாயகர் அலங்கார உற்சவம்
## சிறப்பு மலர்

3. 9. 91 முதல் 12. 9. 91 வரை

## விக்கினங்கள் தீர்த்துவைக்கும் விக்னேஸ்வரன்

## சங்கத்தானை இத்தியடி பிள்ளையார்

சிங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த தமிழூர், சங்கத்தானையில் வீரகத்தி விநாயகனுக்குக் கோயில்அமைத்துப்பக்திநெறி வளர்த்து வருகின்றனர் அடியார்களின் விக்கினங்களைத தீர்ப்பதால் விக்கினேஸ்வரன் என்றபெயரையும், வேண்டிய சித்திகளை அருள்வதால் சித்தி விநாயகர் என்றும், என்றும் இளைஞராய், பிள்ளையாய் இருப்பதால் பிள்ளையார் என்றபெயரையும் பெறுகிறார். பலவளங்களும் நிறைந்த தென்மராட்சி, சாவகச்சேரிப்பகுதி சங்கத்தானையில் விநாயகர் கோயில் கொண்ட தலம் பல வழிகளிலும் சிறப்புற்று விளங்குகின்றது. பொன்விழையும் பூமி.

நல்ல திருவருளைப் பொழிகின்ற யானைமுகத்தினையுடைய விநாயகப் பெருமானை மனம், மெய் மொழிகளால் வழிபட்டு வந்தால் கல்வி வருந்திக் கற்கவேண்டிய ஒரு பொருளல்ல என்கிறார் உமாபதி சிவாச்சாரியார். யாழ் குடாநாட்டிலேயே சிறப்புற்று விளங்கும் கல்விக்கூடம் சாவகச்சேரி இந்துக்கல்லூரியும் இத்தலத்திற்கு மேற்கிலேயே அமைந்துள்ளது கண்டிவீதி சங்கத்தானையிலிருந்து கால் கிலோ மீற்றர் கிழக்கில் இத்தலம் பொலிவுற்று விளங்குகிறது. மூர்த்தி விசேடம் பெற்ற இத் தல விருட்சமாக இத்திபோற்றப்படுகிறது.

17-06-1886 இல் இத்தலத்தில் முதல் கும்பாபிஷேகம் நடைபெற்றது. பின்பு 1935 இலும் 1988 இலும் புனருத்தாரண கும்பாபிஷேகம் நடைபெற்றது. இப்பகுதி மக்கள் பிள்ளையாரில் மிகுந்த பக்தியுடையவர்கள். இப்பகுதியில் பஞ்சம், நோய் நொடியின்றிச் சீரும் சிறப்புமாக செல்வச் சிறப்புடன் மக்கள் வாழ்கின்றனர்.



மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சவிசேடம்பெற்ற இத்தியடி வீரகத்தி விநாயகனை முறையாகத்தரிசித்தால் சித்தியும், முத்தியும் வாய்க்கப்பெறும் பிள்ளைகளின் மத்தியிலே பிள்ளையாரைக் காணலாம். இப்பகுதிமக்கள் தெய்வ பக்தி குருபகதி மிக்கவர்களாகக் காணப்படுகின்றனர்.

தனியார் கோயிலாக இருந்து, சைவசமய நெறிமுறைகளுக்கேற்பப் பரிபாலிக்கப் பெற்ற இவ்வாலயம். பொதுப் பரிபாலனத்துள் பிள்ளைகளால் (இளைஞர்களால்) பொறுப்பேற்கப்பட்டு யாப்புவிதிமுறைகளுக்கேற்பப்பலரும் போற்றத்தக்க பரிபாலனம் செய்யபபடுகிறது. இவ்வாலயத்தில் விசேட தினப் பூசைகள், நித்திய நைமித்திய காமியக் கிரிகைகள் ஒழுங்காகச் செய்யப்படுகின்றன.

காலந்தவருத பூசைமுறையுண்டு. சங்காபிஷேகம, வருடாவருடம் விசேட உற்சவத்துடன் நடைபெற்று வருகிறது. கோயில் பரிபாலனசபையும், இந்து இளைஞர்மன்றமும் இணைந்து இவ்வாலயத்தை மையமாகக் கொண்டு இயல், இசை, நாடகத் தமிழினுடன் பக்திநெறியை வளர்த்து வருகின்றனர்.

விநாயகர் தனக்குமேல் ஒரு தலைவன் இல்லாதவர். பிரணவத்தின் பொருளானவர், இத்தலத்தில் கோயில்கொண்டு மக்களின் விக்கினங்களைப் போக்கி அருளாட்சி செய்கின்றார்.

செ. சுப்பிரமணியம்
பீ ஏ. டிப் இன் எ.டி
அதிபர்
மீசாலை விக்கினேசுவர
மகாவித்தியாலயம்.

இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!! வினைத்திறன், நிறைவிளைவு, சமுதாய நீதி நிலவுக.

## சாவகச்சேரி இத்தியடி
## வீரகத்திவிநாயகர்

தென்மராட்சியில் முக்கிய பட்டினம் சாவகச்சேரியாகும். கோயிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்' என்ற கோட்பாட்டின்படி பல கோயில்களை தன்னகத்தே கொண்டது சாவகச்சேரியாகும். பல சிறந்த ஆலயங்களுள் மேற்படி ஆலயமும் ஒன்றாகும்.

சுற்றத்திற்கழகு சூழ இருத்தல் என்று சொல்வதுபோல கோயிலுக்கழகுபக்தர்கள் சூழ இருத்தல் என்று கூறலாம். அச்சூழலில் உள்ளவர்கள் கோயில் மணி ஓசை கேட்டே உண்பதும் உறங்குவதும் செய்வார்கள். சுவாமி எங்களை வளர்க்கிறார். நாங்கள் சுவாமியை வளர்க்கவேண்டும் என்று யோகர் சுவாமிகள் அடிக்கடி கூறினர்கள்:

இக்கோயிலைச் சூழ உள்ள பக்தர்களும் பக்தி நீர்பாய்ச்சி விநாயகப்பெருமானை வளர்க்கிறார்கள். கோவில் விஷயத்தைப்பொறுத்தவரையில் எல்லோரும் ஒற்றுமையாகவே கோயில் விஷயங்களில் ஈடுபட்டு விநாயகப்பெருமானுடைய திருவருளுக்காளாகின்ருர்கள்,

விநாயகப் பெருமானுடைய விசேட தினங்கள் எல்லாம் இவ்வாலயத்தில் முறைப்படி கொண்டாடப்பட்டு வருகின்றன. வெள்ளிதோறும் கூட்டு வழிபாடு நல்ல முறையில் நடைபெற்று வருகின்றது. வெள்ளிதோறும் விசேட அபிடேகங்களும் சுவாமி வீதி உலாவும் நடைபெற்று வருகின்றன

இந்து இளைஞர் மன்ற ஆதரவில் இளைஞர்களுக்கான சமய அபிவிருத்திக்கான வகுப்புக்களும் பரீட்சைகளும் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்புகளும் ஆண்டுதோறும் நடைபெற்றுவருகின்றன.

இவ்வாலயம் 200 வருடங்களுக்கதிகமானபழமை வாய்ந்தது. தனக்கெனத் தனித்துவமான அற்புதச் செயல்களையும் உடையது இவ்வாலயம்.

சூழவுள்ள மக்கள் யாவரும் விநாயகப் பெருமானுடைய அற்புதத் திருவருளில் மிகுந்த நம்பிக்கையுடையவர்களாதலினல் எக்கருமம் செய்யினும் அவரை வேண்டுதல் செய்தே தொடங்குவர். அதனல் மக்களுடைய வாழ்வில் விநாயகப் பெருமான் இரண்டறக்கலந்து விட்டார்.

விநாயகனே வெவ்வினையை
வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை
தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும்
நாதனுமாந் தன்மையினல்
கண்ணிற் பணிமின் கனிந்து

ஆத்மஜோதி
நா. முத்தையா
குரு பவனம்
சாவகச்சேரி

வீரகத்தி விநாயகா உன் அருள்வேண்டி நிற்கும்
இந்திரன் ஜுவல்லர்ஸ்
தங்க, வைர நகை வியாபாரம்
10, நவீன சந்தை, சாவகச்சேரி.

விக்கினங்கள் தீர்க்கும் விநாயகனே சரணம்!
ராஜன் ஆபரண மாளிகை
(22 கரட் தங்க நகைகள், இரத்தினங்கள் கிடைக்குமிடம்)
தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரி.

விநாயகனே வினைகள் தீர்த்தருள்வாய்!
லட்சுமி ஜுவல்லர்ஸ்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
39, கண்டி வீதி. சாவகச்சேரி.

வீரகத்தி விநாயகரே சரணம் சரணம் சரணம்!
★ பாட்டா செருப்பு ★ ஆடம்பர சாமான்கள்
★ பரிசுப் பொருட்கள் ★ ரேடியோ
★ மணிக்கூடுகள்
வி ம லா ஸ்
9, நவீன சந்தை, சாவகச்சேரி.

துதிப்போர் வினையகற்றும்
வீரகத்தி விநாயகரே வணக்கம்!
பிள்ளையார் கூட்டு உடமை
104, கண்டி வீதி, சாவகச்சேரி.

விக்னேஸ்வரா உன் அருள்வேண்டும்
வதனி ஆபரண மாளிகை
சாவகச்சேரி.
கிளை: கண்டி வீதி, கொடிகாமம்.

தும்பிக்கையான் துணை
விநோதம் தேநீர்சாலை
கச்சாய் வீதி, சாவகச்சேரி.

வீரகத்தி விநாயகர் அருள் எங்கும் விளங்குக
கீதா ஜுவல் ஹவுஸ்
தங்க வைர நகை வியாபாரம்
12, நவீன சந்தை,
பிரதான வீதி,
சாவகச்சேரி.

வேழமுகனே பரிவுடன் என்றும் எம்மைக் காக்குக
50 வருடம் சேவையாற்றும் ஸ்தாபனம்
செ. சபாரத்தினம் பத்தர்
தங்க மாளிகை
22 கரட் தங்க நகை வியாபாரம்
18, கண்டி வீதி, சாவகச்சேரி.

வீரகத்தி விநாயகனின் பேரருள்பெற்று உய்வீர்களாக
ஜவுளி உலகின் புதிய சங்கமம்
மம்மி டடி
100, கண்டி வீதி, சாவகச்சேரி.

சகல கஷ்டங்களையும் போக்கும்
முழுமுதற் கடவுளே வணக்கம்
மங்கள அழகு சாதனம்
கண்டி வீதி, சாவகச்சேரி.

கணபதியே சரணம் ஐயா
சின்னத்தம்பி அன் கோ
பலசரக்கு மாளிகை
நவீன சந்தை, சாவகச்சேரி.

விநாயகனே வெவ்வினை வேரறுக்க வல்லான் போற்றி
ஸ்ரீ விக்கினேஸ்வரா ஸ்ரோர்ஸ்
கண்டி வீதி, சாவகச்சேரி.

## 31ம் நாள் நினைவஞ்சலி



அமரர் சீனியர் முருகேசு

தோற்றம்: 1929-3-27

மறைவு: 1991-8-4

எம்மை யெல்லாம் அன்புடனும், பண்புடனும்
பாசத்துடனும் வாழவைத்து எம்மை
ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில்
கொண்டிருக்க காலதேவன்
எங்களிடமிருந்து பிரித்ததேனோ?


அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

"பவள வாசம்",
கலைநகர்,
அளவெட்டி தெற்கு,
1991-09-03.

[சி 5253]

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
சங்கரப்பிள்ளை கோபாலபிள்ளை

எம் அன்புத் தெய்வமே
உங்கள் பூதவுடல் அழிந்தாலும்
வஞ்சமில்லாமுகமும் கள்ளமில்லா
வெள்ளை உள்ளமும்
என்றென்றும் எம் இதயத்தை விட்டகலா.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
இறைஞ்சுகின்றோம்.
ஓம் சாந்தி

மனைவி: கோ. தேவராணி,
பிள்ளைகள்: சாந்தி, வசந்தி,
கவிதா, சந்திரபோஸ்.
மாமி: அ. சிவபாக்கியம்,
சகோதரர்: ச. நாகராசா,
மைத்துனி: நா. சரோஜாதேவி,
மைத்துனர்கள்: அ. பரமானந்தம்.
அ. திகில்அழகன்
மைத்துனிமார்கள்: க. யோகராணி.
சகோதரிகள்: ப. யோகநாயகி,
தி. தவச்செல்வி.
சகலன்: கு. கணேசலிங்கம்.
பெறுமக்கள்: தேவிகா, ராதிகா,
பிரதீபராஜன், சந்திரிகா.
மருமக்கள்: அஸ்விதா, அஸ்விதன்,
ஜீவா, பிரவீன்.

"ராணி பவன்"
7-ம் வட்டாரம், புங்குடுதீவு.

(சி-5225)

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு செப்ரெம்பர் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Regestered as a News Paper at the General Postoffice Sri Lanka under Licence Number B/10336/81,

## ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

பலாலி, காரைநகர் இராணுவ முகாம்களிலிருந்து நேற்று பொதுமக்கள் வாழும் பகுதிகளை நோக்கிப் பல தடவைகள் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

பலாலி இராணுவ முகாமிலிருந்து கட்டுவன், குப்பிளான், வீமன்காமம், தெல்லிப்பளை ஆகிய இடங்களை நோக்கி ஷெல் தாக்குதல்களும், 50 கலிபர் தாக்குதலும் நடத்தப்பட்டன.

காரைநகரில் இருந்தும் நேற்று நண்பகல் குடியிருப்புக்களை நோக்கிப் பல தடவைகள் பலத்த ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

## இந்திய மீனவர் தாக்கப்படுவதை தடுத்து நிறுத்துமாறு ஜெயலலிதா கோரிக்கை

(சென்னை)

கச்சதீவு கடற்பகுதியில் இந்திய மீனவர் மீது இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதை தடுத்து நிறுத்த இந்திய மத்திய அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா கோரியுள்ளார்.

கடந்த சனிக்கிழமை இலங்கைப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் 4 மீனவர் படுகாயமடைந்து குதித்து தப்பிவந்துள்ளார்கள் இவ்வாறு இறந்தகாயமடைந்த மீனவருக்கு இலங்கையிடமிருந்து நஷ்டஈடு பெறுமாறும் அவர் கோரியுள்ளார். (சி)

## ஊரடங்கு தளர்வு

(வவுனியா)

செட்டிகுளம் பகுதியில் அமுலிலிருந்த ஊரடங்கு உத்தரவு நேற்று மாலையிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

## அழைப்பு

(யாழ்ப்பாணம்)

இதுவரைகாலமும் தொலைக்காட்சிப்படங்கள் தயாரித்தவர்களும், தயாரிப்பு முயற்சியில் ஈடுபட்டவர்களும், தயாரிக்க விரும்புபவர்களும் நாளை மறுதினம் 5-ம் திகதி வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு நிதர்சனம் அலுவலகத்தில் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

## துப்பாக்கிப் பிரயோகம்

(வவுனியா)

வவுனியா நகருக்குச் சென்ற தமிழ் மக்களை நோக்கி இராணுவத்தினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர்.

நேற்றுக்காலை வவுனியா நகருக்குச் சென்ற தமிழ் மக்களை நோக்கி நகர இராணுவ முகாம் பாதுகாப்பரணிலிருந்த இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார்கள்.

இச்சம்பவத்தில் ஏற்பட்ட சேதவிபரம் பற்றித் தெரியவரவில்லை.

## புலனாய்வுக்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வுள்ளனர்.

சில நபர்களைப் பற்றி முக்கிய தகவல்களை பெறும் பொருட்டே அவர்கள் இலங்கை அதிகாரிகளை சந்திக்க கொழும்பு வரவுள்ளனர். (சி)

## நாடாளுமன்ற

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சந்தித்து, குற்றச்சாட்டு மனு செல்லுபடியற்றது எனவும், அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கமுடியாது எனத் தெரிவிக்கவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது

## திருமலையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலில் இராணுவ தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி வெரித்தாஸ் தெரிவித்தது

## எதிரான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டத்தில் கலந்துகொண்டதாகத் தெரியவருகிறது.

இக்கூட்டத்தில் பங்குபற்றிய உறுப்பினர்களின் தனது நண்பர்கள் யார்? எதிரிகள் யார்? எனத் திரு பிரேமதாசாவினால் முற்றிலும் இனம் காணமுடியாது என பி பி ஸி. தெரிவித்தது.

திரு.பிரேமதாசாவுக்கு எதிரான மனுவில் கையெழுத்திட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கூட்டத் தொடரில் பங்குபற்றுமாறு எதிரணியினரால் முன்னரே வேண்டுகோள் விடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதிக்கு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கள் கிடைக்குமென்றும் அந்தப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கு எதிராக கையெழுத்திட்டவர்களை மீண்டும் தமது பக்கம் சேர்க்க முயற்சிகள் நடப்பதாகவும் அவர் தெரிவித்தார். [சி]

## நாடாளுமன்றில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யோசனையொன்றைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இப்பிரேரணைக்கு ஆதரவாக கையொப்பமிட்ட ஐ தே. கட்சி உறுப்பினர்களும் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் மேற்கொண்டு என்னென்ன செயற்திட்டங்களில் ஈடுபடுவதென்ற விடயங்களைத் தயாரிக்கவென கூட்டுச்செயற் கமிட்டி ஒன்றை நியமித்துள்ளனர்.

## பிரேமாவிற்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வெற்றிடம்-13. தற்போது உள்ளவர்கள்-87: கையெழுத்திட்டோர்-76. சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் 66பேர் கையெழுத்திட்டுள்ளனர்

கையெழுத்திடாத எதிர்க்கட்சி உறுப்பினர்கள்: முஸ்லிம் காங்கிரஸ்-4, ரெலோ-1 (திவ்யநாதன்), சுதந்திரக் கட்சி-1 (ஸ்ரான்லி திலகரட்ன), கூட்டணி 2 (மாவை சேனாதிராசா, ஜோசப் பரராஜசிங்கம்). சுயேட்சை-1 (மட்டக்களப்பு-சேகு தாவுத் பஷீர்). (சி)

## லெப். இளஞ்செழியன் 45-வது நினைவுதினம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் கவிஞர் வாஞ்சிநாதனின் ஒரே புதல்வனை கட்டைக்காட்டு மோதலில் வீரமரணமடைந்த லெப் இளஞ்செழியனின் 45-வது நினைவுதினத்தையொட்டி இன்று மாலை அவரது உருவப்படம் மயிலியதனை தொண்டமானாறுபாலச்சந்திரன் வீதியில் அவரது தாயார் திருமதி தங்கராணி வாஞ்சிநாதனினால் திரைநீக்கம் செய்யப்படவுள்ளது.

மாவீரர்களின் பெற்றோர்களினால் நடத்தப்படும் இந்த நிகழ்விற்கு தியாகி சிவகுமாரனின் தாயார் திருமதி அன்னலட்சுமி பொன்னுத்துரை தலைமை வகிப்பார்

லெப்.நித்திலாவின் தாயார் திருமதி நல்லையா, கப்டன் மில்லரின் தாயார் ஆகியோர் மங்கள விளக்கேற்றி நிகழ்ச்சியை ஆரம்பிக்க 5 பிள்ளைகளை விடுதலைப் புலிகளுடன் இணைத்துள்ள மாவீரன் யசோவின் தாயார், மேஜர் ஜேம்ஸின் தந்தையார் ஆகியோர் உரையாற்றுவார்கள்.

இந்நிகழ்வில் விடுதலைப்புலிகள் இயக்கப் பிரமுகர்கள் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வார்கள்.

## ஸ்ரீ ல சு க ஆர்ப்பாட்ட

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் மனுமீதான விவாதத்தை உடனடியாக பாராளுமன்றில் வாக்கெடுப்பிற்குவிட வேண்டுமெனவும் பேரணியும், பிரசாரமும் நடத்தவுள்ளதாகவும் அவர் கூறினார்.

பாராளுமன்றம் கலைக்கப்படும் சூழ்நிலை ஏற்பட்டால அதுகுறித்து தாம் மகிழ்ச்சியடைவார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். [சி]

## எம். பி-க்களுக்கு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மேற்படி எம். பி.க்களின் பாதுகாப்புக் குறித்து அவர்கள் அச்சமடைந்திருப்பதையடுத்தே திரு. லலித்.பொலிஸ் மா அதிபருடன் தொடர்வு கொண்டபோது இந்த உறுதிமொழி வழங்கப்பட்டதாம்.

சகல எம். பி.க்களும் ஏதாவது ஆபத்திற்கான அறிகுறிகள் தோன்றினால் தம்முடன் உடன் தொடர்புகொள்ளுமாறும் பொலிஸ் மா அதிபர் கூறியுள்ளார். (சி)

## 21ம் நாள் நினைவஞ்சலி

திரு. மனுவல்பிள்ளை அந்தோனிப்பிள்ளை
(இளைப்பாறிய இ. போ. ச. சாரதி)

என்று வருவீர்கள் என
எண்ணியிருந்தோம் நாம்
அந்தமண்மீது உம்-ஆவி
பிரிந்த செய்தி
வந்தடைந்த வேளை
வருந்தி நின்றோம்
ஆறாத துயரமதை ஆற்றிடினும்
உம் நினைவு மாறாது வாடுகின்றோம்.
நேரான பாதைதனை காட்டி எமை
சீராக வாழவைத்த செல்வமே ஐயாவே!
தேவனது பாதமதில் உம்
ஜீவனது அமைதி பெற இறைஞ்சுகின்றோம்.

14—8—91 அன்று நீர்கொழும்பில் மறைந்த எமது தந்தையாரின் பிரிவுச் செய்தி கேட்டு எமது துயரத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும், அன்னாரின் ஈமச்சடங்குகளில் தம்மாலான உதவிகளை வழங்கிய நீர்கொழும்பு வாழ் நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அ. செபமாலைதாசன்,
உபதபால் அதிபர்.
நாவாந்துறை.

(சி-5252)